# நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாண சபை

## செய்திக் குறிப்பு – 04 (29.11.2024 காலை 09.00 மணி)

## “தற்போது உருவாகியுள்ள காற்றமுழுத்த தாழ்வு நிலை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளப் பேரிடர் எச்சரிக்கை”

### வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றமுழுத்த தாழ்வு நிலை

வளிமண்டலவியல் திணைக்கள தரவுகளிற்கமைய 28.11.2024 மாலை 5.30 மணிக்கு திருகோணமலையிலிருந்து வடகிழக்காக 200 km தொலைவிலும் காங்கேசன்துறையிலிருந்து தென் கிழக்காக 270km தொலைவிலும் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றமுழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து வடக்கு - மேற்கு திசையில் தமிழ் நாட்டின் கரையோர திசை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதுடன் இதன் தாக்கம் 29.11.2024 (இன்று) இற்கு பின்னர் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கமைய வடமாகாணத்தில் சில இடங்களில் இன்றைய தினம் 100 mm வரையான மழை வீழ்ச்சி பதிவாகலாம் என்பதுடன் தொடர்ந்து வரும் நாட்களில் இடையிடையே மழையுடன் கூடிய காலநிலையும் தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

26ம் , 27ம் திகதிகளில் 150 mm வரையான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் சராசரியாக 26ஆம் திகதி 250 mm அளவிலும், 27ஆம் திகதி 100 mm அளவிலும் 28 ஆம் திகதி 150mm மழைவீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் 10mm அளவிலான மழைவீழ்ச்சியே கிடைக்கப்பெற்றது.

| S. No | Name of Rain fall Stations | Rainfall (mm) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 25.11.2024 | 26.11.2024 | 27.11.2024 | 28.11.2024 | Total |
| 1 | Iranamadu (Kilinochchi) | 114.3 | 212.3 | 115.9 | 10.3 | 452.8 |
| 2 | IE's Office, Pannai. (Jaffna) | 15.0 | 240.2 | 95.6 | 6 | 356.8 |
| 3 | Kanakarayan kulam (Vavuniya) | 130.0 | 298.0 | 58.0 | 0 | 486.0 |
| 4 | IE's Office, Pallamadu (Mannar) | 45.0 | 235.0 | 40.0 | 6 | 326.0 |
| 5 | Muththuiyankaddu (Mullaitivu) | 112.8 | 228.3 | 67.1 | 2.3 | 410.5 |
| 6 | Mankulam | 89.0 | 289.5 | 62.0 | | 440.5 |

இதுவரை தொடர்ச்சியாக பொழிகின்ற மழை காரணமாக சகல குளங்களினதும் நீரேந்து பிரதேசம் மற்றும் குளங்களின் கீழான பிரதேசம் முழுவதுமாக நீர் உறிஞ்சப்பட்டு நிரம்பிய நிலையில் (fully saturated condition) உள்ளமையினால் கிடைக்கப்பெறும் சிறிய மழை வீழ்ச்சியும் பாரிய அனர்த்த நிலையினை எற்படுத்தலாம். ஆழ்ந்த காற்றமுழுத்த தாழ்வு நிலை இலங்கையில் இருந்து விலகி மெதுவாக நகர்வதாலும் இடையிடையே அதிக மழைவீழ்ச்சி எதிர்பார்க்கபடுவதாலும் அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

நீர்தேக்கங்களின் தற்போதைய நிலை (29.11.2024, காலை 7: 00 மணி)

| S.N | District | IE Division | No of Tanks | Status of the tank | |
|---|---|---|---|---|---|
| | | | | Spilling / Reached its full capacity | Capacity above 75% |
| 1 | Kilinochchi (9) | Kilinochchi East | **4** | 3 | 1 |
| | | Kilinochchi west | **5** | 4 | 1 |
| 2 | Mannar (7) | Mannar | **7** | 7 | 0 |
| 3 | Vavuniya (17) | Vavuniya & Cheddikulam | **17** | 17 | 0 |
| 4 | Mullaitivu (21) | Muththu Iyan Kaddu | **9** | 5 | 1 |
| | | Vavunikkulam | **12** | 12 | 0 |
| **Total** | | | **54** | **48** | **3** |

# நித்தகைக்குளம் 2019 ஆண்டு உடைப்பெடுத்தது.
# தட்டையர்மலைகுளமானது முத்துஐயன்கட்டு குளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இரணைமடுக்குளம்**

| Name of Tank | FSD | Capacity (Ac.ft) | Water level | Present Capacity in % | Design Afflux | Spilling | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| Iranamadu Tank | 36'-00" | 120,650 | 34'-10" | 92.41% | 05' - 07" | Nil | Radial gates opened- 4 gates 6’’ |

**முத்துஐயன்கட்டு**

| Name of Tank | FSD | Capacity (Ac.ft) | Water level | Present Capacity in % | Design Afflux | Spilling | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| Muththuiyankaddu | 24'-00" | 47,953 | 19'-00" | 65% | 03'-00" | Nil | Radial gates closed. |

**தண்ணிமுறிப்பு**

| Name of Tank | FSD | Capacity (Ac.ft) | Water level | Present Capacity in % | Design Afflux | Spilling | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| Thannimurippu kulam | 21'-00" | 17,561 | 19'-10" | 89% | 05'-00" | | Radial gates open- LB , C , RB fully opened |

**வவுனிக்குளம்**

| Name of Tank | FSD | Capacity (Ac.ft) | Water level | Present Capacity in % | Design Afflux | Spilling | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| Vavunikulam | 26'-00" | 41,901 | 26'-06" | 100% | 02'-5.5" | 6`` | |

வெள்ள தடுப்பணைகள் - **யாழ்ப்பாணம்**

| Name of the Scheme | Sill Level (MSL) | Full Supply Depth (MSL) | Full Storage Level (MSL) | Fresh Water level (MSL) | Sea water level (MSL) | Spilling height | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| **Thondamanaru** barrage in vadamarachi lagoon scheme | (-2'-00") | 6'-00" | 04'-00" | 03'-02" | 03'-01" | | Type A, 15 Nos - 48"<br>Type B, 16 Nos - 18" |
| **Ariyalai** barrage in upparu lagoon scheme | (-1'-00") | 5'-00" | 04'-00" | 04'-00" | 03'-2.5" | | Type A, 41 Nos - 48"<br>Type A, 1 Nos - 24" |
| **Araly** barrage in valukkaiaru drainage scheme | 00'-02" | 2'-10" | 03'-00" | 03'-07" | 02'-10" | 7’’ | Type A, 09 Nos - 36" |

வடமாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது வரை கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி காரணமாக 48 குளங்கள் வான் பாய்வதுடன் 03 குளங்கள் முழுக் கொள்ளளவினை அண்மித்துள்ளன. குறிப்பாக வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட வான் கதவுகளை கொண்ட பாரிய குளங்களான இரணைமடு, முத்துஐயன்கட்டு மற்றும் தண்ணிமுறிப்பு குளங்களின் நீர்மட்டம் முழுக் கொள்ளளவை அண்மித்துள்ளது

வெள்ள முன்னெச்சரிக்கை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக தொடர்ச்சியாக 4 தினங்களாக (26.11.2024) வான்கதவுகள் ஊடாக இக் குளங்களில் இருந்து நீர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான நீர் மட்டம் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எதிர்வு கூறலுக்கு அமைவாக எதிர்வரும் தினங்களில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் பட்சத்தில் குளங்களிற்கு அதிகளவிலான நீர் வரத்து கிடைக்கப்பெறலாம்.

வான் கதவுகளற்ற குளங்களின் நீர்மட்டமானது குளங்களின் முழுக் கொள்ளளவை தாண்டி வான் பாய்ந்து கொண்டிருப்பதுடன் ஆற்றுப்படுக்கைகளின் நிலங்களும் முழுமையாக நீர் நிரம்பிய நிலையில் காணப்படுவதனால் தொடர்ந்து கிடைக்கக்கூடிய மழை வீழ்ச்சி வெள்ளப் பெருக்கினையும் குளங்களின் சடுதியான நீர் மட்ட உயர்வினையும் ஏற்படுத்தும்.

இந் நிலையில் வடக்கு மாகாணத்தின் சில இடங்களில் அதிகளவிலான மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளமையினால் அந் நிலையினை எதிர் கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் 24 மணி நேரமும் தயார் நிலையில் செயலாற்றுவதுடன் உரிய தொடர்பாடல்கள் மூலம் ஏனைய அரச திணைக்களங்கள், முப்படையினர், பொதுமக்களுக்குரிய தகவல்களை பரிமாறி வருகின்றோம். குறித்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் தாக்கம் முழுமையாக விலகாமையினால் எதிர் வரும் தினங்களில் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பதற்கு அனைவரும் விழிப்புடன் செயலாற்றக் கூடியவாறு தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

எந்திரி. ந.சுதாகரன்
மாகாணப் பணிப்பாளர்,
நீர்ப்பாசனப் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

Eng.N.Suthakaran
Provincial Director
Department of Irrigation
Northern Province